අග්‍රාමාත්‍ය කාර්යාලය
பிரதம அமைச்சரின் அலுவலகம்
PRIME MINISTER'S OFFICE

58, ශ්‍රීමත් අර්නස්ට් ද සිල්වා මාවත, කොළඹ 07.
58, ஸ்ரீமத் ஏர்னஸ்ட் த சில்வா மாவத்தை, கொழும்பு 07.
58, Sir Ernest de Silva Mawatha, Colombo 07.
Web : www.pmoffice.gov.lk

PTF/01/Circular/01

2020.04.29

சுற்றறிக்கை இலக்கம்: PTF/03/2020 (v)

**அனைத்து மாவட்டச் செயலாளர்கள் மற்றும்**
**அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும்**

**தற்போது ஏற்பட்டுள்ள பேரிடர் நிலைமை காரணமாக சமூக நன்மைகள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் காத்திருப்புப் பட்டியலில் உள்ள பயனாளிகளுக்கு ரூ.5000/- கொடுப்பனவைச் செலுத்துதல்.**

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள PTF/03/2020 ஆம் இலக்க, 2020.03.31 ஆந் திகதிய சுற்றறிக்கை மற்றும் PTF/03/2020 (iv) ஆம் இலக்க, 2020.04.20 ஆந் திகதிய சுற்றறிக்கை மற்றும் அதற்கு இடைநேர்விளைவான சுற்றறிக்கைகள் மூலம் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு மேலதிகமாக இது வெளியிடப்பட்டுகிறது.

02. மேலே குறிப்பிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகளுக்கு ஏற்ப, ஏலவே பயனாளிகளைத் தெரிவு செய்துள்ள போதிலும், பின்வரும் துறைகளில் தொழில்களில் ஈடுபட்டுள்ள நபர்கள் உள்ள குடும்பங்களுக்கு ரூ.5000/= கொடுப்பனவைச் செலுத்துவதில் ஏற்பட்டுள்ள நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக கொடுப்பனவு கிடைக்கவில்லை என அறியக் கிடைத்துள்ளது.

I. தொழில்களுக்காக வெளிநாடு சென்றுள்ள நபர்கள் உள்ள குடும்பங்கள்
II. ஆடைத்துறை உட்பட பல்வேறுபட்ட தனியார் துறைகளில் பணியாற்றும் நபர்கள் உள்ள குடும்பங்கள்
III. தோட்டத்துறையில் தொழில்களில் ஈடுபட்டுள்ள நபர்கள் உள்ள குடும்பங்கள்

03. PTF/03/2020 (iv) ஆம் இலக்க, 2020.04.20 ஆந் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம், தொழில்களுக்காக வெளிநாடு சென்றுள்ள நபர்கள் உள்ள குடும்ப அலகுகளின் வெளிநாடு சென்ற அங்கத்தவர்/ அங்கத்தவர்கள் தமது குடும்ப அலகுக்கு பணம் அனுப்பவில்லை என்பதையும், முன் சேமிப்புக்கள் இல்லை என்பதையும் உறுதிப்படுத்துவதற்காகத் தாமே தயாரித்த உறுதிப்படுத்தல் ஆவணத்தைச் சமர்ப்பிக்கும்போது, பயன்களைப் பெற்றுக்கொள்வதற்குத் தகுதியானவர் என கிராமியக் குழு தீர்மானிக்குமாயின், அவ்வாறு பயன்களைச் செலுத்துவது தொடர்பாக கருத்திற்கொள்ள முடியும்.

04. மேலும், ஆடைத்துறை உட்பட பல்வேறுபட்ட தனியார் துறைகளில் பணியாற்றும் நபர்கள் உள்ள குடும்ப அலகுகள் ஏப்ரல் மாத சம்பளத்தைப் பெற்றுக்கொள்ளவில்லை என்பதை அல்லது செலுத்தப்பட்ட சம்பளம் ரூ.5000/= க்கு குறைவானது என்பதை உறுதிப்படுத்துவதற்காகத் தாமே

தயாரித்த உறுதிப்படுத்தல் ஆவணத்தைச் சமர்ப்பிக்கும்போது, பயன்களைப் பெற்றுக்கொள்வதற்குத் தகுதியானவர் என கிராமியக் குழு தீர்மானிக்குமாயின், அவ்வாறு பயன்களைச் செலுத்துவது தொடர்பாக கருத்திற்கொள்ள முடியும்.

05. அத்துடன், தோட்டத்துறையில் அமய/ பதிலீட்டு/ தற்காலிக அடிப்படையில் சேவையாற்றுகின்ற, தமது நாளாந்த/ மாதாந்த வருமானத்தை இழந்த குடும்ப அலகுகளுக்கு கொடுப்பனவைச் செலுத்தும்போது, அவர்கள் தாமே தயாரித்த உறுதிப்படுத்தல் ஆவணத்தைச் சமர்ப்பித்த பின்பு, பயன்களைப் பெற்றுக்கொள்வதற்குத் தகுதியானவர் என கிராமியக் குழு தீர்மானிக்குமாயின், அவ்வாறு பயன்களைச் செலுத்துவது தொடர்பாக கருத்திற்கொள்ள முடியும்.

**அன்டன் பெரேரா**
பிரதம அமைச்சரின் மேலதிக செயலாளர்
இணைச் செயலாளர் - பொருளாதாரப் புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணி

பிரதிகள்:

01. ஜனாதிபதியின் செயலாளர்
02. அமைச்சரவையின் செயலாளர்
03. கணக்காய்வாளர் நாயகம்

} தயவுடன் தகவலுக்காக

04. செயலாளர், நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு
05. செயலாளர், அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
06. செயலாளர், மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு அமைச்சு
07. பணிப்பாளர் நாயகம், சமூர்த்தி அபிவிருத்தித் திணைக்களம்

} தேவையான நடவடிக்கைகளுக்காக